

# புனித லூர்து மாதா தேவாலயம்

45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா
**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**
Tel: 05-5279349 Fax: 05-5276671
அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org



**திருத்தந்தையின் கருத்து : விசுவாசத்திலிருந்து விலகிய கிறிஸ்தவர்கள்: விசுவாசத்திலிருந்து விலகிய நமது சகோதர, சகோதரிகள், நமது செபத்தின் வழியாகவும், நற்செய்தியின் சாட்சியத்தின் வழியாகவும், ஆண்டவரின் இரக்கமிகு நெருக்கத்தையும், கிறிஸ்தவ வாழ்வின் அழகையும் மீண்டும் கண்டடைய வேண்டுமென்று**

**ஜூலை மாத கரு : வார்த்தை தெளிவு ஊட்டும்**

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஜூலை 16 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 15ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 15ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | சிறார்களுக்கான திருப்பலி @ பெர். மையம் |
| | மாலை 6.00 | திருப்பலி (த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம், ஜெலாப்பாங் |
| ஜூலை 20 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | புனித அப்போலோனாரியஸ் |
| ஜூலை 21 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பிரிந்திசி நகர் புனித லாரன்ஸ் |
| ஜூலை 22 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித மகதலா மரியா |
| ஜூலை 23 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 16ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ) | பொதுக்காலம் 16ஆம் ஞாயிறு |
| | காலை11.00 | திருப்பலி (ம) | பொதுக்காலம் 16ஆம் ஞாயிறு |
| | மாலை 5.30 | நவநாள்/ திருப்பலி (த) | கிறிஸ்து அரசர் சிற்றாலயம், புந்தோங் தீகா |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| ஜூலை 16 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 7.30 | ஜெலாப்பாங் | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய செயற்குழு கூட்டம் |
| ஜூலை 17 திங் | மாலை 7.30 | முனிசிபல் | அருங்கொடை (த) |
| ஜூலை 18 ~ 20 | மாலை 8.00-10.00 | பெர். மையம் | ஊதாரி மகன் ஒடுக்கம் (தமிழ்) |
| ஜூலை 18 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| | மாலை 7.45 | பெர். மை 2-3 | நற்கருணை பணியாளர்கள் கூட்டம் |
| | மாலை 8.15 | பெர். மை 2-4 | பங்கு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் (பஒகு) |
| ஜூலை 19 புதன் | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| ஜூலை 20 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA- புதிய வகுப்பு |
| | மாலை 8.00 | பெர். மை 2-3 | பெற்றோர்கள் ஆதரவு குழு கூட்டம் |
| ஜூலை 21 வெள் | மாலை 8.00-10.00 | பெர். மையம் | "பெற்றோரியல்" சொற்பொழிவு- முனைவர் காதர் இப்ராகிம் |
| | மாலை 8.00 | ஜெலாப்பாங் | அருங்கொடை (த) |
| | மாலை 8.00 | புந்தோங் தீகா | இரக்கமிகு ஆண்டவர் செபம் |
| ஜூலை 22 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| | மாலை 5.30 | ஆலயம் | செபமாலை/ சகாய மாதா நவநாள் |
| ஜூலை 23 ஞா | காலை 8.30 | பெர். மையம் | மறைக்கல்வி (த) |
| | காலை 10.30 | பெர். மையம் | மறைக்கல்வி (ஆ) |
| | மதியம் 12.00 | ஆலயம் | புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு பயிற்சி (த) |
| | மாலை 7.30 | புந்தோங் தீகா | கிறிஸ்து அரசர் சிற்றாலய செயற்குழு கூட்டம் |

**ஜூலை மாத திருமணம் 2017**

ஜூலை 29 மாலை 4.00 சடங்கு (ஆ) கெவின் ஜே ஆனந்த் த/பெ ஜெயபால் & நவோமி ஏன் நிர்மலா த/பெ டோமினிக் செல்வம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

# பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பெற்றோர் ஆதரவுக் குழு**: மாற்றுத் திறனாளிகளுக்கான பெற்றோர் ஆதரவுக் குழு சிறப்பு குழந்தைகளுடைய பெற்றோர்களை இக்குழுவில் சேர்ந்துக்கொள்ள மிகவும் எதிர்பார்க்கிறார்கள். அனைத்து அதிச தலைவர்களும் தங்களுடைய வட்டாரத்திலுள்ள சிறப்பு குழந்தைகளை அடையாளங்கண்டு விபரங்களை பங்கு அலுவலகத்தில் சமர்பிக்கவும். பெற்றோர் ஆதரவுக் குழு பிரதிநிதிகள் இக்காரியத்திற்காக அவர்களை சந்திப்பர்.

**2. புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னம்மாள் திருவிழாவையொட்டி நேரலை**: 29 ஜூலை 2017 (சனி) மாலை 8.00க்கு நேரலை செய்யப்படும். பினாங்கு ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் நடைபெறும் கொண்டாட்டத்தை இணையத்தில் **http://www.youtube.com/user/liveonlinepenang** வழி காணலாம்.

3. **உள்ளிருப்பு தேவழைத்தல் 2017**: "என் பின்னே வாருங்கள்; நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" மத் 4:19 **நாள்:** 31 ஆக ~ 3 செப் வரை (வியாழன் ~ ஞாயிறு) **இடம்:** பொது குருத்துவ கல்லூரி, பினாங்கு **வயது**: (18 - 40 ) மேல் தகவல்களை தெரிந்துக்கொள்ள பினாங்கு மறைமாவட்ட தேவழைத்தல் இயக்குநர்: தந். அலோய்சியஸ் தான் (016-4661946) / மின்னஞ்சல்: aloytanys@yahoo.com அல்லது பங்கு குருவானவர்களை தொடர்பு கொள்ளவும்.

**4. புவிடிபா**: புனித வின்சென்ட் டி போல் கல்வி புத்தகம் மற்றும் கதை புத்தகங்களை இலவசமாக கொடுக்கிறது. பங்கு மக்களே உங்களுக்கு தேவையான புத்தகங்களை 16 ஜூலை 2017 (ஞாயிறு) காலை 7.00மணி & 9.00மணி திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம்.

**5. குணமளிப்பு செபம் (தமிழ்):** புகழ் ஆராதனை, நற்கருணைக் கொண்டாட்டம், திவ்விய நற்கருணை ஆராதனை, குணமளிப்பு செபம் ஆகியவற்றின் வழியாக பெந்தகொஸ்தை அனுபவியுங்கள். அனைவரும் அழைக்கப்படுகிறீர்கள். நாள்: 25 ஜூலை 2017 (செவ்) நேரம்: இரவு 7.30 இடம்: புலூமாதே. இதனையொட்டி 23/7/17 (ஞாயிறு) மதியம் 2.00 மணிக்கு பாடல்குழு பயிற்சி நடைபெறும். புதிய வல்லமையான பாடல்களை அறிமுகப்படுத்த இருக்கிறோம். இந்த பயிற்சியில் அனைவரும் கலந்துக்கொள்ள அழைக்கப்படுகிறீர்கள்.

**6. ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2:** அனைவருக்குமானது! நான்கு உற்சாகமான, பாடத்தொகுதிகள்: வத்திக்கான் சங்கம் II, திருச்சபை வரலாறு, மறைப்பணி இறையியல், மற்றும் நன்னெறி இறையியல். 14 அக்டோபரில் தொடங்குகிறது. விரிவுரைகள் மாதத்தில் இரு சனிக்கிழமைகளில் நடைபெறும். (காலை 9.00 ~ மதியம் 1.00 வரை) இடம்: புலூமாதே, சிலிபின் சாலை, ஈப்போ, பேராக். கட்டணம்: ரிம 400/- @ ஒரு பாடம் ரிம 100/- பங்கேற்பாளர்கள் ஒரு பாடத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப பணம் செலுத்தலாம். எல்லா நான்கு பாடங்களையும் முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். கையேடுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது http://www.pdpinstitute.org. மேல் விபர தொடர்புக்கு: 04-2611350 (திங் ~ வெள் அலுவலக நேரம்)

**7. கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி 50ஆம் ஆண்டு கொண்டாட்டம்: இடம்**: திருக்குடும்ப தேவாலயம், காஜாங். **நாள்**: 31 ஆக~1 செப் 2017 (வியா~வெள்) **பேருந்து, தங்கும் விடுதி & பதிவு**: ரிம 150/- **தொடர்புக்கு:** சவரிமுத்து (012-4514690)

**8. காலை சிற்றுண்டி**: தனித்த தாய்மார்கள் 23 ஜூலை 2017 (ஞாயிறு) காலை திருப்பலிகளுக்கு பிறகு வாழ்வின் ஊற்று அலுவலகத்தில் காலை சிற்றுண்டியை விற்பனை செய்ய ஏற்பாடு செய்துள்ளனர்.

**9. பயிற்சி நேரம்**: பங்கின் எல்லா தலைவர்களுக்கும் தீமமோ IV சிந்தனையை அடிப்படையாக கொண்ட செயல்முறைகள் பற்றிய பயிற்சி நடைபெறும். நாள்: 23~25 ஆக 2017 (புதன், வியா& வெள்) நேரம்: இரவு 8.00~10.00 இடம்: பெர். மை

**10. ஊதாரி மகன் ஒடுக்கம் ஆங்கிலத்தில்:** இந்த ஒடுக்கம் 31 ஜூலை ~ 2 ஆக 2017 (திங், செவ் & புதன்) @ மாலை 8.00~10.00வரை பெர்.மையத்தில் நடைபெறும். தயவு செய்து பெயர்களை பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**11. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**12. சிற்றாலய கட்டுமான திட்டங்கள்:** ஒவ்வொரு சிற்றாலயம் கட்டுவதற்கு (கிஅ/ அவே) உச்ச வரம்பாக ரிம 1.2 மில்லியன் என ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டு விட்டது. அந்த திட்டம் அதனை விட மலிவாகவும் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், எந்த திட்டமும் 80% பணம் வங்கியில் இல்லாமல் தொடங்கப்பட முடியாது. இந்த வகையில் நமது ஒவ்வொரு சிற்றாலயம் கட்டும் பணியை தொடங்க நம்மிடம் குறைந்தது ரிம 960,000.00 இருக்க வேண்டும். இது பினாங்கு மறைமாவட்ட கொள்கை. "நீங்கள் திட்டத்தை தொடங்குங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்ற பேச்சு தேவையில்லை. நம்மிடம் பணம் இருந்தால் நாம் கட்டுவோம், இல்லையேல் நம்மிடம் பணம் வந்து சேரும் வரை காத்திருப்போம்!!!

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜூன் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **336,906.65** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **341,304.88** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**09/07/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,264.55 **காலை 9.00** - RM 1,665.90 **தாசேக்–** RM 117.35 **மொத்தம்–** RM 3,047.80
**2017** - RM 225.00

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்